# ஸ்ரீ பத்ரகாளியம்மன் கோயில் வழிபாட்டு முறைகளும், திருவிழாக்களும்

**முனைவர் மு.நடராஜன்**

**உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,**

**எக்ஸல் பொறியியல் கல்லூரி,**

**குமாரபாளையம் -637303.**

**அய்வுசுருக்கம்**

சங்க காலத்தில் உருவ வழிபாடு கிடையாது. அக்காலத்தில் போரில் வீர மரணம் அடைந்த வீரர்களுக்கு நடுகல் நட்டு அவர்களை இறைவனாகப் பாவித்து வழிபட்டுவந்தனர். நாகரீக வளர்ச்சி ஏற்பட்ட பின்னர் தான் இறைவனுக்கு உருவச் சிலைகள் அமைத்து மக்கள் வணங்கி வருகின்றனர். கிராமப்புறங்களில் வாழும் மக்கள் அவர்கள் விரும்பும் வகையில் உருவங்களை செய்து கோயிலில் வைத்தனர் தெய்வங்களை ஊர் தெய்வங்கள், என்றும் காவல் தெய்வங்கள், என்றும் குலதெய்வங்கள், என்றும் பிரித்தனர், அவ்வகையில் உருவான மாமுண்டி என்ற ஊரில் உள்ள தெய்வங்களில் ஒன்றான ஸ்ரீ பத்ரகாளியம்மனின்.

நாட்டுப்புற மக்கள் நாட்டுப்புற தெய்வங்களை மட்டுமின்றி பெருந்தெய்வங்களையும் வழிபடுகின்றனர். நாட்டுப்புற மக்கள் நாட்டுப்புற தெய்வங்களை நம்பிக்கையுடனும், அச்சம் கலந்த உணர்வுடனும் வழிபடுகின்றனர். நல்லது நடந்தால் தெய்வ அருள் என்றும், தீயவை நடந்தால் தெய்வத்தின் கோபம் என்றும் நம்புகின்றனர். கோபம் தனிக்க இறைவனுக்கு வழிபாடுகள் மற்றும் திருவிழாகளும் உருவாக்கினார்.

**திறவுச்சொல்**: பத்ரகாளியம்மன், வழிபாடு , குலதெய்வ வழிபாடு, நன்றியறிவு , அன்பு, அறிவு வளர்ச்சி

**முன்னுரை**

ஆதிகால மக்கள் இயற்கையோடு இணைந்து தம் வாழ்வினை வாழ்ந்து வந்தார்கள். இயற்கையோடு சேர்ந்து வாழ்ந்த மக்கள் அவற்றோடு இயற்கை சார்ந்த பொருள்களை இறைவனாக எண்ணி வழிபட்டனர். நமக்கு நன்மை பயக்கும் என்று நம்பினார்கள். அதனால் இறைவனுக்கு விழாக்களும் கொண்டாடினார்கள். இவ்வாறு தோன்றிய வழிபாடே வழிபாட்டிற்கு முக்கிய அடிப்படையாக அமைந்து இதே போன்று மாமுண்டி

கிராமத்தில் அமைந்துள்ள ஶ்ரீ வடபத்ரகாளியம்மன் கோயில் வழிபாட்டு முறைகள் மற்றும் திருவிழாக்கள் பற்றி இவ்வியலில் காண்போம்.

**வழிபாடு**

'வழிபாடு' என்ற சொல் வழிபடு என்ற சொல்லில் இருந்து தோன்றியது. வழிபடு என்ற சொல் தமிழ் பேரகராதியில் வழியிற் செல்லுகை, பின்பற்றுகை, வணக்கம் என்று பொருள் கூறுகிறது.

இறைவனை மக்கள் எளிதில் அடைய முடியாத காரணத்தினால் அவற்றை அடைவதற்கு கோயில்களில் வழிபாட்டு முறையை தொடகினார்கள். இறைவழிபாட்டு முறையினை சிறுதெய்வ வழிபாடு, பெருந்தெய்வ வழிபாடு என்று பாகுபடுத்தினார்கள். இவற்றில் பெருந்தெய்வ வழிபாடு என்றால் சிவன், திருமால், முருகன், பிரம்மன் போன்ற தெய்வங்களை வழிபடும் வழிபாடாகும். சிறுதெய்வ வழிபாடென்றால் மாரியம்மன் காவல் தெய்வம் போன்ற தெய்வங்களை வழிபடும் வழிபாடாகும்.

மக்கள் இயற்கையோடு வாழ்ந்த காலத்தில் இயற்கை ஆற்றலுக்கு அஞ்சத் தொடங்கினான். அந்த அச்ச உணர்வைப் போக்குவதற்கு தொடங்கியதே வழிபாடு என்பர். இயற்கையால் நன்மை கிடைப்பதற்காக எண்ணியபோது அதற்கு நன்றி செலுத்தும் விதமாக மக்கள் கூடி நின்று இறைவனை வழிபடத் தொடங்கினார். இயற்கை ஒளிகளுக்கு எதிராக மக்கள் கூடி நின்று அவ் இறைவனை வழிபட்டனர்.

**இயற்கை வழிபாடு**

பண்டைய மக்கள் இயற்கை வழிபாட்டையே தொன்மையானதாக கருதுகின்றனர். அவ்வழிபாட்டின் தொடர்ச்சி இன்றைய சமய வழிபாடுகளிலும் இருந்து வருகிறது. இயற்கை வழிபாட்டின் தொடக்கமாக தொல்காப்பியர் கூறுவது.

> **"நிலம் தீ நீர்வளி விசும் போனடைந்தும்**
>
> **கலந்த மயக்க உலகம்"[1]**

என்று தொல்காப்பியர் இயற்கையால் உருவான உலகத்தைக் கூறுவதைக் காண்கிறோம். பழந்தமிழர்கள் அண்டத் தோற்றத்தை விளக்கும் போது காற்று, தீ, நீர், நிலம் இயற்கை எனக்குறிப்பர்.

**மரபு வழிபாடு**

இயற்கைப் பொருட்களை எல்லாம் தெய்வமாக எண்ணி வழிபட்ட மக்கள் மலை, ஆறு முதலியவற்றில் தெய்வங்கள் உறைவதாக நம்பினர். அத் தெய்வங்களை வழிபட வில்லை என்றால் அவை சீற்றம் கொள்ளும் என அஞ்சினார்கள்.

தமிழரின் தெய்வ வழிபாட்டு முறைகளுக்குக் காரணமாக அச்சம், முற்காப்பு, நன்றியறிவு, அன்பு, அறிவு வளர்ச்சி ஆகியவையே இறை வழிபாட்டிற்கு

அடிப்படையாயிற்று. நன்மைகள் நல்;கும் மரங்கள் மீது மக்கள் கொண்ட நன்றியுணர்வும் மரபுவழிபாட்டின் அடிப்படை காரணங்களாகும்.

மரபுவழிபாடு காடுகளில் அடர்ந்து இருந்த மரங்களுக்கு நடுவே உள்ள தெய்வங்களை வழிபட்ட வழிபாடும் சமயகாலத்தில் திருக்கோயில் வழிபாட்டில் புனித மர வழிபாடாக மேற்கொள்ளப்பட்டன. மரங்களின் பெயரை வைத்து அங்கு உறையும் இறைவனுக்கு பெயர் சூட்டப்பட்டது.

**“வெண் நாவல் அமர்ந்துறை வேதியன்**
**வேண் நாவலுளே நின்றாய்”**[2]

என்று திருஞானசம்பந்தர் இறைவனை வழிபடுகிறார்.

**வழிபாட்டின் வகைகள்**

பண்டைய கால தமிழ் மக்கள் தனித்தனியாக அவர் அவர்கள் விரும்பிய தெய்வங்களை வணங்கி வந்தார்கள். அவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து குறிப்பிட்ட தெய்வத்தை வணங்கினர். மக்கள் முயற்சிக்குத் துணை வேண்டி தெய்வத்தை வழிபட்டனர். தெய்வம் தம்மைக் காப்பதாக எண்ணினார்கள். அவ்வாறு தோன்றிய தெய்வங்கள் சிறுதெய்வங்கள் என்றும், பெருந்தெய்வங்கள் என்றும், பிரிக்கப்பட்டு வழிபாடு செய்கின்றனர்.

**சிறு தெய்வ வழிபாடு**

சிறுதெய்வ வழிபாடு என்பது நாட்டார் தெய்வங்களை வழிபடும் முறையாகும். இந்த சிறுதெய்வ வழிபாட்டில் வீட்டுத்தெய்வ வழிபாடு, குலதெய்வ வழிபாடு, இனத்தெய்வ வழிபாடு, ஊர் தெய்வ வழிபாடு, மற்றும் பல வகைகள் காணப்படுகின்றன. இந்த தெய்வ வழிபாட்டு முறையில் பொதுவான இலக்கணங்களோ, வரைமுறைகளோ வகுக்கப்படவில்லை.

உலகின் தொன்மையான வழிபாடு இயற்கை வழிபாடாகவும், அதற்கு அடுத்ததாக சிறு தெய்வ வழிபாடு இருப்பதாகவும் கருதப்படுகிறது. சிறு தெய்வ வழிபாடு திட்டவட்டமான வரையறை இல்லாதது என்றும் நாட்டுப்புற தெய்வ வழிபாடு எல்லாம் முன்னோர்கள் வழிபட்ட வழியே என்று கூறப்படுகிறது.

**ஸ்ரீ பத்ரகாளியம்மன் வழிபாட்டு முறை**

ஸ்ரீ பத்ரகாளியம்மனுக்கு ஆகம விதிமுறைப்படி இல்லாமல் சிறுதெய்வ வழிபாட்டு முறைப்படி பூசாரிகளால் பூசை செய்யப்படுகின்றன. மாரியம்மன் கோவில்களில் பூசை செய்த பிறகே ஸ்ரீ பத்ரகாளியம்மன் கோயிலில் பூசை நடைபெறும்.

**ஸ்ரீ பத்திரகாளி அம்மன் அலங்காரம்**

ஸ்ரீ பத்திரகாளியம்மன், சிங்கம், விநாயகர், பூதகணங்கள,; பலிபீடம், ஊஞ்சல் புனித நீரால் தூய்மை செய்த பிறகு நல்லெண்ணெய், சந்தனம், பால், தயிர் திருநீறு, மஞ்சள் போன்ற பொருட்களைத் தெய்வங்கள் மீது ஊற்றி பூசை செய்த பின்பு தெய்வத்தைத் தண்ணீர் ஊற்றி நன்கு தூய்மை செய்வார்கள்.

பின்பு ஸ்ரீ பத்ரகாளியம்மனுக்கு பட்டுச்சீலை அணிவிக்கப்படும், தாமரைப்பூ, ரோஜாப்பூ மாலை, எலுமிச்சை மாலை, மல்லிகைபூ மாலை, போன்ற பூ மலைகளை சூட்டிய பின்பு மற்ற தெய்வங்களுக்கு மாலை சூட்டுவார்கள். தலையில் வெள்ளியால் ஆன கிரீடம் அணிவித்த பின்பு பத்ரகாளியம்மனுக்கு திருநீறு இட்டு மஞ்சள், சிவப்பு, குங்குமம் வைத்து பூசை செய்கின்றார்கள்.

**வழிபாட்டிற்கான படையல் முறைகள்**

ஸ்ரீ பத்ரகாளியம்மன் பாதத்தின் அருகாமையில் இரண்டு பக்கமும் விளக்கு ஏற்றப்படும், வாழைப்பழம், தேங்காய், பத்தி, சூடம், வெற்றிலை பாக்கு, எலுமிச்சை பழம் வைத்து படைப்பர். வாழை இலையில் வெண்பொங்கல், சர்க்கரைப் பொங்கல் போன்ற பொருட்களை வைத்து அம்மன் முன்பு படைக்கின்றனர்.

**பூசை முறைகள்**

ஸ்ரீ பத்ரகாளியம்மன் கோயில் அம்மனுக்கு பூசை செய்யும்போது தேங்காய் உடைப்பார். பின்னர் பத்தியை ஏற்றி வாழைப்பழத்தில் குத்தி வைப்பார்கள். மணி ஒலிக்க, இசைக்கருவிகள் முழங்க பூசை நடைபெறும். முதலில் விநாயகருக்கு பூசை செய்து பின் பத்ரகாளியம்மனுக்கு சாம்பிராணி காட்டிய பின்பு இரண்டு பூதகணங்களுக்கு காட்டிய பிறகு பத்ரகாளியம்மனை நோக்கியுள்ள சிங்க வாகனத்திற்கு காட்டி, பலிபீடம், கொடிக்கம்பம், ஊஞ்சலுக்கு காட்டிய பிறகு கருவறை அடுத்த இடது புறத்திலுள்ள கன்னிமார்களுக்கும், குதிரை வாகனத்திற்கும் காட்டுவார்.

பின்பு கருப்பண்ண சாமிக்கும், குறிஞ்சி மண்டபத்திலும் காட்டிய பிறகு அர்த்த மண்டபத்தின் வெளியே செம்புத்தகட்டின், மேல் இருக்கும் லட்சுமிகளுக்கு மேல்நோக்கி சாம்பிராணி காட்டுகின்றார். பிறகு பத்ரகாளியம்மனுக்கு காட்டிவிட்டு பிறகு சூடம் ஏற்றி பூசை செய்த பின்பு பக்தர்களுக்கு பிரசாதம் வழங்குவார். நெற்றியில் இடுவதற்கு சிவப்பு மற்றும் திருநீறு பிரசாதமாக அளிக்கப்படும். பின்னர் அன்னதானம் வழங்கப்படுகிறது.

**ஸ்ரீ பத்ரகாளியம்மன் கோவில் பூசை பொருட்கள்**

தேங்காய், சூடம், சாம்பிராணி நல்லெண்ணெய் வாழைப்பழம் சந்தனம் எலுமிச்சை பழம் பூமாலை பூணூல் புடவை கற்கண்டு விளக்குத்திரி பச்சரிசி ஆகியவை பூசைக்குரிய பொருட்களாக கருதுகின்றனர்.

**நாள் வழிபாடு**

ஸ்ரீ பத்ரகாளியம்மன் கோயிலில் ஒவ்வொரு நாள் காலையில் 6.30 மணிக்கு பொங்கல் வைத்து இறைவனுக்கு தேங்காய், பழம், சூடம், பத்தி, சாம்பிராணி வைத்து வழிபாடுகள் செய்கின்றனர்.

**வார வழிபாடு**

வார வழிபாடாக செவ்வாய்க்கிழமை மற்றும் வெள்ளிக்கிழமை அன்று சிறப்பு பூசைகள் நடைபெறும். அன்று ஸ்ரீ பத்ரகாளியம்மனுக்கு பால் அபிஷேகம், சந்தன அபிஷேகம் செய்து பின் அம்மனுக்கு அலங்காரம் செய்வர், அலங்காரம் செய்த பின்பு வாழைப்பழம், தேங்காய், சூடம், பத்தி, வெற்றிலை, பாக்கு, ரோஜாப்பூ மாலை, மல்லிகைபூ மாலை போன்ற பொருட்களை வைத்து பூசாரி பூசை செய்வார், பூசை முடிந்த பின்பு பக்தர்களுக்கு பிரசாதமாக திருநீறு, சிகப்பு கொடுப்பர், பின் சர்க்கரை பொங்கல் அன்னதானமாக வழங்குகின்றார்கள், 12 மணி முதல் 1.30 மணி அளவில் பூசைகள் நடைபெறும்.

**மாத வழிபாடு**

ஸ்ரீ பத்ரகாளியம்மன் கோயில் அமாவாசை, பௌர்ணமி நாட்களில் பூசைகள் நடைபெறும.; ஸ்ரீ பத்ரகாளியம்மனுக்கு பால் அபிஷேகம், பன்னீர் அபிஷேகம,; சந்தன அபிஷேகம் செய்த பின்பு அம்மனுக்கு பட்டு சேலை அணிவித்து அலங்காரம் செய்கின்றனர், பின்பு தேங்காய,; வாழைப்பழம், சூடம், பத்தி, எலுமிச்சம்பழம், பொங்கல் போன்ற பொருட்களை வைத்து அம்மனுக்கு பூசாரி பூசை செய்கின்றனர், பூசை முடிந்த பின்பு பக்தர்களுக்கு பிரசாதமாக சிகப்பு கொடுப்பர். பின்பு பக்தர்களுக்கு அன்னதானம் வழங்குகின்றனர்.

கட்டளை காரர்கள் இருந்தால் அம்மாவாசை, பௌர்ணமி அன்று சாம்பார் சாதம,; தக்காளி சாதம் வழங்குவார்கள். அப்படி கட்டளைகாரர்கள் இல்லை என்றால் பூசாரி சர்க்கரைப் பொங்கல் அல்லது வெண்பொங்கல் வைத்தல் சுண்டல் போன்றவற்றை வழங்குவார்கள.; காலை 7 மணி முதல் 9 மணி அளவில் நடைபெறுகின்றன.

**சிறப்பு வழிபாடு**

ஸ்ரீ பத்ரகாளியம்மனுக்கு ஆண்டு முழுவதும் சிறப்பு வழிபாடு நடைபெறும், சித்திரை தமிழ் வருடப்பிறப்பு, ஆடிபதினெட்டு, விநாயகர் சதுர்த்தி, மார்கழி மாத பூசை போன்ற நாட்களில் அம்மனுக்கு சிறப்பாக செய்கின்றனர்.

**ஆடி பதினெட்டு**

மாமுண்டி ஊரில் உள்ள மக்கள் ஆடி பதினெட்டுக்கு ஏழு நாட்களுக்கு முன் நவதானிய முளைபாலிகை போட்டு வைப்பார், இந்த முளைபாலிகையில் கம்பு, நெல், துவரை, கடலை, பாசிப் பயிறு, உளுந்து வீட்டில் வைப்பார்கள், இம்முளைப்பாலிகை நன்கு செழிப்புடன் வளர்ந்தால் நம் முன்னோர்கள் நம்மை சீரும் சிறப்புடன் வைத்துக் கொள்வார் என்று நம்பிக்கை கொள்வர்,

ஆடி பதினெட்டு அன்று விடியற்காலை 5 மணி அளவில் முளைப்பாரிகையை வழிபடுவதற்காக ஆற்றுக்கு செல்வார்கள். அங்கு சென்றவுடன் காசு, அருகம்புல் தலையில் வைத்து தலை மூழ்குவார்கள். அடுத்து புத்தாடை அணிந்துகொள்வர், பின்னர் ஏழு கன்னிமார்களை மண்ணால் பிடித்து வைப்பார்கள். மஞ்சள் பிள்ளையாரையும் பிடித்து வைப்பர். அதற்கு பின்னர் வெள்ளை நூலில் மஞ்சள் கலந்து, அக்கன்னிமார்களுக்கு போடுவார்கள். ஏழு கன்னிமார்களுக்கு முன் படையல் போடுவார்கள். பத்ரகாளியம்மன் கோயிலில் உள்ள நாகர் கோயிலில் ஆடி அமாவாசையன்று வெண் பொங்கல் அல்லது சர்க்கரைப் பொங்கல் வைத்து வழிபாடுகள் செய்கின்றன்.

**திருவிழாக்கள்**

“மனித சமுதாயம் பல்வேறு காரணங்களால் பல்வேறு பிரிவுகளாக வாழ்ந்திருந்த போதிலும் அச்சமுதாயம் ஒன்றிணைந்து கொண்டாடுவது திருவிழாக்களாகும்”[3] என்கிறார். சு.சக்திவேல்.

“திருவிழாக்கள் பண்பாட்டு உறவை வளர்க்கவும் ஒருமைப்பாட்டுணர்வை வளர்க்கவும் பயன்படுகின்றன.”[4] என்று குறிப்பிடுவதன் மூலம் திருவிழாக்கள் பண்பாட்டையும் ஒருமைப்பாட்டு உணர்வையும் வளர்ப்பதாக எடுத்துரைக்கிறார்.

ஓர் ஆண்டுக்கு ஒருமுறை அல்லது குறிப்பிட்ட சில தினங்களில் மக்கள் ஒன்று கூடி கொண்டாடுவது திருவிழா அல்லது ஊர்வலம் அல்லது வலம் என்பதே சரியான தமிழ்ப்பதம் ஆகும். உற்சவம் என்பது பிற மொழிச் சொல்லாகும். விழாக்கள் என்பது மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து நடத்தும் கூட்டுச் சடங்கிலிருந்து தோன்றியுள்ளது.

தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொரு கிராமத்திலும் திருவிழாக்கள் கொண்டாடப்பட்டு வருகின்றன.

**கோயில் விழாக்கள்**

கோயில் விழாக்கள் தெய்வத்தின் அருள் கேட்டு நடைபெறும், திருவிழாக்கள் என்றாலே பத்து நாள், இருபது நாள், முப்பது நாள் விழாக்கள் நடைபெறும், மாமுண்டியில் உள்ள ஸ்ரீ பத்ரகாளியம்மன் கோயில் திருவிழாவானது பதினேழு நாட்கள் நடைபெறும்.

**விழாவிற்கு முன் நடைபெறும் நிகழ்ச்சிகள்**

ஸ்ரீ பத்ரகாளியம்மன் கோயில் திருவிழாவும், மாரியம்மன் கோயில் திருவிழாவும். பங்குனி மாதம் வளர்பிறை செவ்வாய் அன்று இரவு திருவிழா நடைபெறும். முதல் நாள் புதன்கிழமை காலை 5.00 மணியளவில் மாரியம்மன் கோயிலில் காப்பு கட்டும் நிகழ்ச்சி நடைபெறும், அப்போது பக்தர்கள் அனைவரும் வந்து கலந்து கொண்டு விரதம் இருப்பவர்கள் கங்கணம் கட்டிக் கொள்கின்றனர்.

**திருவிழாவின்போது பூசை செய்தல்**

ஸ்ரீ பத்ரகாளியம்மன் அனைத்து நாட்களும் அபிஷேகம் செய்த பின் அம்மனுக்கு அலங்காரம் செய்து இரவு 7.30 மணிக்கு பூசை நடைபெறும், திருவிழா நாட்களில் மாலையில் தான் பூசை நடைபெறும் பகலில் பூசை நடைபெறாது.

**முதல் பொங்கல்**

17 வது நாள் வியாழக்கிழமை அன்று அதிகாலை 6.00 மணிக்கு அரண்மனைப் பொங்கலை காப்புக்கட்டிய பூசாரி வைப்பார். ஸ்ரீ பத்ரகாளியம்மனுக்கு பச்சரிசியால் பொங்கல் வைப்பார், அரண்மனைப் பொங்கல் வைத்த பிறகு குலகாணியாளர்கள் மற்றும் ஊர்ப்பொதுமக்கள் பொங்கல் வைக்கின்றனர்.

**பொங்கல் வைத்தல்**

அரண்மனை பொங்கல் வைத்த பிறகு ஸ்ரீ பத்ரகாளியம்மன் கோயிலின் பின்புறம் உள்ள பொது இடத்தில் பொங்கல் வைக்கின்றனர், பொங்கல் ஈசானி மூலையில் பொங்கி வந்தால் குடும்பம் மகிழ்ச்சியாக இருக்கும் என்று நம்பப்படுகிறது. பொங்கல் பொங்கி வந்தவுடன் பொங்கல் வைக்கும் பெண்கள் கிழக்கு நோக்கி பச்சரிசியைக் கையில் எடுத்துக் கொண்டு ஸ்ரீ பத்ரகாளியம்மனை வழிபாடு செய்து பச்சரிசியை அப்பானையில் போடுவார்கள. சிலர் சர்க்கரைப் பொங்கல் வைப்பதை காணமுடிகிறது.

**குதிரை துலுக்க விடுதல்**

கட்டிபாளையத்தில் உள்ள மாரியம்மன் கோயிலில் குதிரைக்கு திருநீறு, சந்தனம், குங்குமம் வைத்து மாலை அணிவித்து கோயிலில் தலைவர் குதிரையை துலுக்கப் பிடிப்பார், அவருக்கும் திருநீறு, சந்தனம், குங்குமம், வைத்து மாலை அணிவிக்கப்படும்.

பின்பு குதிரையை மாரியம்மன் முன்பு நிறுத்தி வைத்துக் குதிரைக்கும், மாரியம்மனுக்கும் பூசை நடைபெறும்.

பூசை செய்த பிறகு குதிரைக்குத் தீர்த்தம் தெளித்து, திறுநீறு வைக்கப்படும். பிறகு பூசாரி மாவிளக்கு செய்து தட்டில் வைத்து இரண்டு மாவிளக்கிலும் நெய் ஊற்றி திரி வைத்து தீபம் ஏற்றப்படும், பிறகு குதிரையை கட்டிபாளையத்திலிருந்து மேள தாழத்துடன் ஸ்ரீ பத்ரகாளியம்மன் கோவிலுக்கு அழைத்து வருவார்கள்.

**மஞ்சள் நீர் விளையாட்டு**

மஞ்சள் நீர் விளையாட்டு திருவிழாவின் இறுதி நாளில் கொண்டாடப்படுகிறது. இவ்விழா மாமன் முறையில் உள்ள ஆண்களின் மீது முறைப்பெண்கள் ஊற்றி விளையாடுவர், இந்த மஞ்சள் நீர் விளையாட்டு ஊரில் கிருமிகள் எதுவும் தாக்காமல் இருக்க வேண்டும் என்பதற்காக விளையாடப்படும் என்று அறிவியல் ரீதியாக உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஸ்ரீ பத்ரகாளியம்மன கோயில் 18ம் நாள் வெள்ளிக்கிழமை அன்று மாரியம்மனுக்கு கிடா வெட்டி பூஜை நடைபெறுவதால் அடுத்த நாள் சனிக்கிழமை 19 ஆம் நாள் காலை 7.30 மணி அளவில் மஞ்சள் நீராட்டு நிகழ்வாகும் மஞ்சள் நீராட்டின் போது உற்சவ மூர்த்திகளான விநாயகர், காளியம்மன், மாரியம்மன் இம்மூன்று தெய்வங்களுக்கு அலங்காரம் செய்து வண்டியின் மீது ஏற்றி வைப்பார்கள். அத்தெய்வத்தை வைப்பதற்காக அவ்வண்டியை அலங்காரம் செய்து தெய்வங்களை வண்டியில் ஏற்றி வீதி உலா வருவார்கள். முதலாவதாக அக்ரஹார தெருவுக்கு போவார்கள் பின் மற்ற தெருக்களுக்கு செல்வார்கள். ஊரில் உள்ள மக்கள் தங்கள் வீட்டில் நீரில் மஞ்சள் கலந்து வைப்பார்கள். அப்போது வீதி உலா வருபவர்கள் மீது மஞ்சள் நீரை ஊற்றுவார்கள்.

**முடிவுரை**

நாட்டுப்புற மக்கள் தங்கள் தெய்வங்களை ஒரு குறிப்பிட்ட இடத்தில் வரையறை இல்லாமல் நமக்கு பிடித்தமான இடங்களில் எல்லாம் வைத்து வழிபட்டுள்ளனர். கோயிலில் உள்ள சிற்பங்கள்  மரம், தந்தம், கல், பஞ்சலோகம் முதலியவைகளினால் ஆன சிற்ப உருவங்கள் அமைக்கப்படுகின்றன. மாமுண்டி ஊருக்கு வடகிழக்கில் சுற்றுச்சுவர்களுக்கு இடையில் விண்ணைத்தொடும் வண்ணமிகு விமானத்துடன் பக்தர்களுக்கு பேரருளையும் ,  மழையையும் பொழியச் செய்து வடதிசை நோக்கி ஸ்ரீ பத்ரகாளியம்மன் அமர்ந்த கோலத்தில் ஆட்சி செய்து வருகிறார் அறியமுகியரது.

மேலும்,  வழிபாடு நம்பிக்கை ,  திருவிழாக்கள் கோயிலில் நடைபெறும் தினசரி பூசைகள், மாதந்தோறும்  நடைபெறும் முக்கிய வழிபாடுகள், வருடந்தோறும் நடைபெறும் திருவிழாக்கள் பற்றியும்  ,   ஒரு காலத்திலிருந்து மற்றொரு காலத்திற்கு மாறி வரும் தன்மையுடையது. பண்பாட்டு வரலாற்றிலே ஓர்  இனத்தாருடைய நம்பிக்கைகள்  ,

எண்ணங்கள் ஆகியன காலப்போக்கில் மாற்றம் அடைகின்றன. அப்படிப்பட்ட நாட்டுப்புற நம்பிக்கைகளை அமைந்துள்ளது.

**அடிக்குறிப்புகள்**

1. தொல்காப்பியம் - பொருள் - பக் - 65
2. திருஞானசம்பந்தர் தேவாரம் - பக் - 25
3. நாட்டுப்புற இயல் ஆய்வு சு.சக்திவேல் - பக் - 235
4. நாட்டுப்புற இயல் ஆய்வு சு.சக்திவேல் - பக்- 235

**துணைநூல் பட்டியல்**


1. முனைவர் சு.சண்முகசுந்தரம். -நாட்டுப்புறவியல், கோடம்பாக்கம் சென்னை-600024.
2. சு.சக்திவேல் - நாட்டுப்புற இயல் ஆய்வு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் , சென்னை.
3. புலவர் செந்துறைமுத்து -திருக்கோவில்களும் வழிபாட்டு முறைகளும் தேவி வெளியீடு சென்னை
4. சிறப்பு மலர் -வெள்ளவத்தை மயூறா பிளேஸ் ஸ்ரீ பத்ரகாளியம்மன் கோயில் - 1987
5. சுப்பிரமணியன், ச.வே., - சங்க இலக்கியம் (முழுவதும்), மணிவாசகர் பதிப்பகம். சென்னை.
6. பி. எல் சாமி -தமிழ் இலக்கியத்தில் தாய்த்தெய்வ வழிபாடு ; நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட் சென்னை.